தினமணி

## நெல்லுக்கு இறைத்த நீர்..!

எஸ். ரவீந்திரன்

First Published : 30 Mar 2012 01:03:02 AM IST

நாட்டில் உணவுப் பொருள்கள் உற்பத்தி குறைகிறது என புள்ளிவிவரங்கள் ஒருபக்கம் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில் வீணாகும் உணவுப் பொருள்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்நிலையில் விவசாய விளைபொருள்களை முறையாகப் பதப்படுத்த முடியாத காரணத்தால் விலைவாசி விண்ணைத் தொட்டுள்ளது.

இன்றைய சூழலில் விவசாயிகள் மாற்றாந்தாய் பிள்ளைகளாக நடத்தப்படுகின்றனர். விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய உரிய சலுகைகள் கிடைப்பதில்லை என்ற புகார் பரவலாக எழுந்துள்ளது.

தாங்கள் விளைவித்த பொருள்களை அரசே கொள்முதல் செய்தால் மட்டுமே விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாது. ஆனால், நிலைமை நேர்மாறாக இருக்கிறது.

விவசாயத்துக்குத் தேவையான உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் தட்டுப்பாடு நிலவுகிறது. மானியமாக வழங்கப்படும் இத்தகைய பொருள்கள் விவசாயிகளை முறையாகச் சென்றடைவதில்லை.

இப்படி பல்வேறு குளறுபடிகள் நீடிப்பதால் விவசாயிகள் சாகுபடியைக் கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கரும்புக்கும், நெல்லுக்கும் டன்னுக்குத் தற்போதைய விலையைவிட கூடுதலாக வழங்க வேண்டும் எனவும் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால், அதற்குரிய பதில் இதுவரை கிடையாது.

இவ்விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் படுஅசட்டையாக இருக்கின்றன.

இது ஒருபுறம் இருக்க உணவு தானியங்களைப் பாதுகாக்க கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து விவசாயிகளால் எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால் அதை மத்திய, மாநில அரசுகள் அலட்சியமாகவே நினைக்கின்றன.

இந்நிலையில் மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார், "இந்திய உணவுக் கழகத்தால் நாடு முழுவதும் கொள்முதல் நிலையங்களைத் திறப்பது சாத்தியமில்லை. அதற்கான தளவாடங்கள் எங்களிடம் இல்லை.

எனவே, விளைபொருள் கொள்முதல் பணியை மாநில அரசுகளே மேற்கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான நிதியை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம். இப்போது மாநில அரசுகளின் கண்காணிப்பில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மூலமே பொருள்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன எனக் கூறியுள்ளார்.

வழக்கமாக அனைத்து விவகாரங்களிலும் மூக்கை நுழைக்கும் மத்திய அரசு இந்த விஷயங்களுக்கு மட்டும் மாநில அரசுகளைக் கைகாட்டி விடுவது எந்த வகையில் நியாயம் என்பதுதான் இப்போதைய கேள்வி.

நாட்டில் அண்மைக்காலமாக அரிசி விலை ஓசையின்றி உயர்ந்து வருகிறது. 90 சதவிகிதம் பேர் அரிசி உணவைப் பயன்படுத்துவது அனைவரும் அறிந்ததுதான். ஆனால், அதிலும் மண்அள்ளிப்போடும் வகையில் மத்திய, மாநில அரசுகள் கண்டும்காணாமல் இருப்பதுடன், நிலைமையைச் சீராக்க எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது வேதனையளிப்பதாக உள்ளது.

இதே நிலை தொடர்ந்தால் உணவு தானியங்களின் விலை உயரும் என்பதுடன் விவசாயிகளுக்கு நஷ்டமே ஏற்படும்.

எனவே, இவ்விஷயத்தில் விவசாயிகளின் நலனைக் காக்கவும், விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும் தக்க நடவடிக்கை தேவை. இல்லையேல், நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்குத்தான் போய்ச் சேரும்.

## நெல் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பு

First Published : 29 Mar 2012 01:06:15 PM IST

தேனி, மார்ச் 28: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் ஆகிய ஊர்களில் நெல் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இது குறித்து ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் தற்போது சம்பா பருவ நெல் அறுவடை தொடங்கியுள்ளது. விவசாயிகள் நலன் கருதி கம்பத்தில் சின்னமல் கர்ணன் தெரு, உத்தமபாளையத்தில் பி.டி.ராஜன் பண்ணை அருகில், சின்னமனூரில் சீப்பாலகோட்டை சாலையில் உள்ள இடத்தில் நெல் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

சம்பா பருவத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சன்ன ரகம் நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1,180-க்கும், பொது ரகம் நெல் ரூ.1,130-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

விவசாயிகள் கொண்டு செல்லும் நெல், அதிகபட்சம் 17 சதவிகதம் அளவு ஈரப்பதம் இருக்குமாறு உலர வைத்துக் கொண்டு செல்ல வேண்டும்.
இந்தத் திட்டத்தில் முற்றிலும் விவசாயிகள் மட்டும் பயனடைவது கண்காணிக்கப்பட்டு வருகிறது.
விவசாயிகள் கொள்முதல் நிலையத்துக்கு நெல் கொண்டு செல்லும் போது நிலத்தின் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை ஆகியவற்றை அளித்து அரசின் ஆதரவு விலை பெற்று பயனடையலாம் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பசுமை வீடுகள் திட்ட ஆய்வுக் கூட்டம்

First Published : 29 Mar 2012 02:35:31 PM IST

கள்ளக்குறிச்சி, மார்ச் 28: தமிழக முதல்வரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்ட பயனாளிகளுடனான ஆய்வுக் கூட்டம் கள்ளக்குறிச்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
நிகழ்ச்சியில் 63 பேருக்கு மொத்தம் ரூ. 23 லட்சத்து 26 ஆயிரத்து 120-ஐ திட்ட இயக்குனர் காசோலையாக வழங்கினார்.
கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட 7 கிராமங்களில் 200 பசுமை வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அவற்றை குறித்த காலத்தில் கட்டி முடிப்பது தொடர்பான ஆய்வுக் கூட்டம் கள்ளக்குறிச்சியில் நடைபெற்றது.
கூட்டத்துக்கு ஒன்றியக் குழுத் தலைவர் அ. ராஜேசகர் தலைமை வகித்தார். ஒன்றியக் குழு துணைத் தலைவர் மு. கண்ணன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் க. மணி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் ஐ. ஜார்ஜ் வாஷிங்டன் வரவேற்றார்.
கிராம வட்டார வளர்ச்சி அலுவலர் ப. மீராபாய், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்வாகம் ரு. கருணாநிதி, பணி மேர்பார்வையாளர் குரு, ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முடிவில் உதவியாளர் அ. ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

## "தென்னை நார் ஏற்றுமதி நகரமாக பொள்ளாச்சியை அறிவிக்க நடவடிக்கை'

First Published : 29 Mar 2012 09:48:49 AM IST

பொள்ளாச்சி, மார்ச் 28: தென்னை நார் உற்பத்தியில் பொள்ளாச்சியை ஏற்றுமதி நகரமாக அறிவிக்க, மத்திய அரசிடம் பேசி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என, மத்திய கயிறு வாரியத் தலைவர் ஜி.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

பொள்ளாச்சியில் மத்திய கயிறு வாரியம் சார்பில், தென்னை நார் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பில் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், மத்திய கயிறு வாரியத் தலைவர் ஜி. பாலச்சந்திரன் பேசியது:

தென் இந்தியாவில் கேரளத்துக்கு அடுத்தபடியாக தென்னை நார் உற்பத்தி அதிகளவில் பொள்ளாச்சி பகுதியில் நடைபெறுகிறது.

தென்னை நார் ஏற்றுமதியாளர்கள், இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு தென்னை நாரை மூலப் பொருள்களாக ஏற்றுமதி செய்யாமல் மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களான மண் அரிப்பைத் தடுக்கும் விரிப்பு, கயிறாலான ஆபரணங்கள், பலகைகள், மெத்தை, கயிறு பொம்மைகள் போன்றவையாக மாற்றி ஏற்றுமதி செய்ய வேண்டும். இதன் மூலமாக மூன்று மடங்கு அதிக வருமானத்தைப் பெறலாம்.

மேலும், இந்தியாவில் 12 மாநிலங்களில் கயிறு உற்பத்தியை ஊக்குவிக்க தென்னை நார் உற்பத்தி சம்பந்தமான 23 தொழில்பேட்டைகள் தொடங்கப்பட உள்ளன. இதில், 3 தொழில்பேட்டைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்படும். இப்போது தென்னை நார் மூலப் பொருள்கள் விலை கிலோவுக்கு ரூ.18-லிருந்து 10 ரூபாயாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனால், தென்னை நார் உற்பத்தியாளர்கள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். இதைத் தடுக்கும் விதத்தில் மத்திய கயிறு வாரியம் மூலமாக தென்னை நார் மூலப் பொருளை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தென்னை மட்டைகளை தொழிற்சாலைகளுக்கும், உணவகங்களுக்கும் விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். இதனால், மட்டைகள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. மேலும், பொள்ளாச்சிப் பகுதி, தென்னை நார் பொருள்கள் உற்பத்தில் ஒரு வருடத்துக்கு ரூபாய் 250 கோடிக்கு மேல் ஏற்றுமதி செய்யும் நகரமாக உள்ளது.


இதனால், பொள்ளாச்சியை தென்னை நார் உற்பத்தியில் ஏற்றுமதி நகரமாக அறிவிக்க, மத்திய அரசிடம் பேச்சு நடத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில், தென்னை நார் உற்பத்தியில் பொள்ளாச்சி ஏற்றுமதி நகரமாகும் என்றார்.

கயிறு வாரிய இயக்குநர் (வர்த்தகப் பிரிவு) குமாரசாமி பிள்ளை, கயிறு வாரிய செயலாளர், வாரிய பொள்ளாச்சி மண்டல அலுவலர் பூபாலன் மற்றும் தென்னை நார் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

## நடப்பாண்டு பிப்ரவரியில்... எட்டு துறைகளின் உற்பத்தி வளர்ச்சி 6.8 சதவீதம்

மார்ச் 30,2012,00:09




புதுடில்லி:சென்ற பிப்ரவரி மாதத்தில், நாட்டின் முக்கிய எட்டுத் துறைகளின் உற்பத்தி, 6.8 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. இது, இதற்கு முந்தைய நிதியாண்டின் இதே மாதத்தில், 6.4 சதவீதம் என்றளவில் இருந்தது என, மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சென்ற ஜனவரி மாதத்தில், முக்கிய எட்டுத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி, 0.5 சதவீதமாக குறைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.நாட்டின் தொழில் துறையில், நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், உரம், உருக்கு, சிமென்ட், மின்சாரம் ஆகியவை முக்கிய எட்டு துறைகளாக விளங்குகின்றன.

சென்ற பிப்ரவரி மாதத்தில், மின்சாரம், நிலக்கரி, சிமென்ட் ஆகிய துறைகளின் உற்பத்தி வளர்ச்சி முறையே, 8 சதவீதம், 17.8 சதவீதம் மற்றும் 10.8 சதவீதம் என்றவில் வளர்ச்சி கண்டுள்ளன. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில் முறையே, 7.2 சதவீதம், மைனஸ் 5.8 சதவீதம் மற்றும் 6.5 சதவீதம் என்றளவில் இருந்தது.

மதிப்பீட்டு காலத்தில், கச்சா எண்ணெய் துறையின் உற்பத்தி வளர்ச்சி, 12.2 சதவீதத்திலிருந்து, 0.4 சதவீதமாக குறைந்துள்ளது. அதேசமயம், சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்களின் உற்பத்தி வளர்ச்சி, 3.2 சதவீதத்திலிருந்து, 6.2 சதவீதம் என்றளவில் அதிகரித்துள்ளது.இயற்கை எரிவாயு உற்பத்தி, மைனஸ் 7.6 சதவீதம் என்றளவில் எதிர்மறை வளர்ச்சியை கண்டுள்ளது. உரம் மற்றும் உருக்கு துறைகளின் உற்பத்தி வளர்ச்சி முறையே, 4.8 சதவீதம் மற்றும் 18.5 சதவீதம் என்றளவிலிருந்து, 4.1 சதவீதம் மற்றும் 4.3 சதவீதம் என குறைந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான, 11 மாத காலத்தில், முக்கிய எட்டுத் துறைகளின் உற்பத்தி, 4.4 சதவீதம் என்றளவில் வளர்ச்சி கண்டுள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில், 5.8 சதவீதம் என்றளவில் சற்று உயர்ந்திருந்தது.

## வாழை நாரில் கயிறு திரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2012,02:32 IST

கடலூர்:கடலூர் அடுத்த கிழக்கு ராமாபுரத்தில் விவசாயிகளுக்கு வாழை நாரில் கயிறு திரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.விருத்தாசலத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், வேளாண்மை அறிவியல் ஆராய்ச்சி நிலையம் சார்பில் கடலூர் அடுத்த கிழக்கு ராமாபுரத்தில் அரசு பள்ளியில் விவசாயிகளுக்கு வாழை நாரிலிருந்து கயிறு திரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சரவணன் தலைமை தாங்கினார்.

வாழை நாரிலிருந்து கயிறு திரிக்கும் பயிற்சியை மதுரையைச் சேர்ந்த முருகேசன் குழுவினர் அளித்தனர்.பயிற்சியின் போது பேராசிரியர் சரவணன் கூறியதாவது:
கடலூர் மாவட்டத்தில் இந்த பகுதியில் அதிகளவு 5 ஆயிரம் ஏக்கரில் வாழை பயிர்செய்யப்படுகிறது. இதனால் இங்கு அதிகளவில் வாழை மரங்களை நார் தயாரிக்க பயன்படுத்தலாம். ஒரு வாழை மரத்திலிருந்து 100 மீட்டர் அளவிற்கு நார் தயாரிக்கலாம், இதில் சிறியளவில் 20 கூடைகளும், பெரிய அளவில் நான்கு கூடைகளும் செய்யலாம். மேலும் இதன் மூலம் சிறிய கூடைகளாக இருந்தால் 250 ரூபாயும், பெரியளவில் இருந்தால் 400 ரூபாயும் வருமானம் ஈட்டலாம், வெறும் நார் மட்டும் தயாரித்து கொடுப்பதாக இருந்தால், மீட்டர் 40 பைசாவிற்கு கொள்முதல் செய்யப்படும் என தெரிவித்தார். மேலும் இதற்கு வங்கி மூலம் மான்யத்துடன் கடன் பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.

## வெயிலால் கொப்பரை உற்பத்தி அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2012,02:25 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் வெயிலின் தாக்கம் அதிகம் காரணமாக கொப்பரை உற்பத்தி அதிகரித்துள்ளது.
கோபி, பங்களாப்புதூர், அயலூர், கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், டி.என்.பாளையம்,

கொளப்பலூர், சிறுவலூர், குள்ளம்பாளையம், குருமந்தார், கடத்தூர், பாரியூர், மேவாணி, வெள்ளாங்கோயில் உள்ளிட்ட பகுதிகளில் தேங்காய் பருப்பு அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு மாதமாக கடுமையாக வெயில் அடிப்பதால், உடைத்த தேங்காய் பருப்பு, நான்கைந்து நாட்களில் நன்றாக காய்ந்து விடுகிறது. உற்பத்தியாகும் கொப்பரை, கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் தனியார் கூடங்களில் விற்பனையாகிறது.
கோபி ஒழுங்கு முறை மற்றும் தனியார் கூடங்களில் இருந்து பெருந்துறை, கொடுமுடி, காங்கேயம் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த எண்ணெய் உற்பத்தியாளர்கள் மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்து கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது.
கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு, சில வாரங்களாக, 200 முதல் 220 மூட்டைகள் வரை தேங்காய் பருப்பு விற்பனைக்கு வந்தது. சென்ற வாரம் கிலோ, 42.36 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்றைய மார்க்கெட்டுக்கு, 445 மூட்டைகள் வரத்தானது. கிலோ, 37.81 முதல் 42.16 ரூபாய் வரை விற்பனையானது. கொப்பரை வரத்து அதிகரிப்பு காரணமாக, நடப்பு வாரம் கிலோவுக்கு, 20 பைசா விலை வீழ்ச்சியடைந்தது.
கொப்பரை உற்பத்தியாளர்கள், ""கேரளாவிலும் தேங்காய் சீஸன் என்பதால், தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு எண்ணெய் அனுப்புவது குறைந்து விட்டது. இதனால், கொப்பரை விலை வீழ்ச்சியடைந்தது. சென்றாண்டு, கிலோ, 72.29 ரூபாய் வரை விலை போனது. தேங்காய் எண்ணெய் தேவை குறைவு காரணமாக, 42 ரூபாயாக விலை சரிந்துள்ளது'' என்றனர்.

## பசுமை வீடு திட்ட கட்டுமானப்பணிகள் தீவிரம்

பதிவு செய்த நாள் : மார்ச் 29,2012,22:55 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்துக்குட்பட்ட 25 ஊராட்சிகளில் முதல்வரின் சூரிய விளக்குடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வீடும் 300 சதுரடி அளவில் ஐந்து அறைகளுடன் கட்டப்
படுகிறது. இந்த நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 180 வீடுகள் கட்டப்படுகின்றன. இதில் ஒவ்வொரு வீட்டிற்கும் 300 கிலோ கம்பிகள் மற்றும் 120 கிலோ சிமென்ட் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 300 டன் சிமென்ட் கொண்டு வரப்பட்டுள்ளது. சீலக்காம்பட்டி ஊராட்சியை தவிர மற்ற தெற்கு ஒன்றியத்துக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
தெற்கு ஒன்றிய அதிகாரி ஒருவர் கூறுகையில், "பொள்ளாச்சி, ஜமீன்கோட்டாம்பட்டி

ஊராட்சியில் பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வந்த வீடுகளில் இரண்டு வீடுகள் முடியும் நிலையில் உள்ளது. மற்ற ஊராட்சிகளில் விறுவிறுப்பாக பணிகள் நடந்து வருகின்றன. விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன', என்றார்.

## "இயற்கை வேளாண்மை புத்துயிர் பெற வேண்டும்'

பதிவு செய்த நாள் : மார்ச் 29,2012,22:40 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : ""நோயில்லாமல் வாழ, நாம் உண்ணும் உணவு, விஷமில்லாமல் இருக்க வேண்டும். இதற்கு, இயற்கை வேளாண்மை, புத்துயிர் பெற வேண்டும்,'' என, வேளாண் விஞ்ஞானி, நம்மாழ்வார் பேசினார்.

ரோட்டரி கோவை மான்செஸ்டர் சார்பில், தொழில்சார் சிறப்பு விருதுகள் வழங்கும் விழா, குப்புசாமி நாயுடு மருத்துவமனை அரங்கில் நடந்தது. ரோட்டரி கோவை மான்செஸ்டர் கவர்னர், அறிவுடையநம்பி, வரவேற்றார். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், பி.எஸ்.ஜி., மருத்துவமனை நுரையீரல் சிறப்பு மருத்துவர், ராமநாதன் ஆகியோருக்கு, தொழில்சார் விருதுகள் வழங்கப்பட்டன.

இயற்கை வேளாண் விஞ்ஞானி, நம்மாழ்வார் பேசிய

தாவது:

ஜெ.ஏ., வாக்கர் என்னும், ஆங்கிலேயர் 1950ல், விவசாயிகளுக்கு, விவசாயத்தை கற்றுக் கொடுக்க, இந்தியா வந்தார். சில நாள் கழித்து, இங்கிலாந்து ராணிக்கு, இந்தியர்களுக்கு, விவ சாயத்தை கற்றுக் கொடுக்க, ஒன்றுமில்லை.

அவர்கள், அனைத்தையும் அறிந்தவர்களாக, உள்ளனர். நம்முடைய, நவீன கருவிகளுக்கு இணையாக, கலப்பை, இயற்கை உரங்கள் போன்றவற்றை, வைத்துள்ளனர். நாம் தான், அவர்களிடமிருந்து, விவசாயத்தை, கற்றுக் கொள்ள வேண் டும் என, கடிதம் எழுதினார்.

ஆனால், இன்று, இந்தியாவில், 43 சதவீத குழந்தைகள், சத்தான உணவில்லாமல், ரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய, அனைத்து பிரச்னைகளுக்கும் காரணம், நாம் இயற்கை விவசாயத்தை, மறந்ததுதான். நமக்கும், விலங்குகளுக்குமான பிணைப்பு பாரம்பரியமானது. இப்போது, நாம் அதனை இழந்து நிற்கிறோம். கால்நடை இனங்களை, வெகுவாக இழந்து வருகிறோம்.

ஒரு உழவன் என்பவன் மண், கால்நடை மற்றும் மனிதனுக்கு உணவு அளிப்பனாக, இருக்க வேண்டும்.

நோயில்லாமல் வாழ, நாம் உண்ணும் உணவு, விஷம் இல்லாமல், இருக்க வேண்டும். ஆனால், இன்று இதற்கு மாறான நிலை, உள்ளது.

நம் உணவுச் சங்கிலி, பாதிக்கப்படக்கூடாது. இச்சங்கிலியில், ஒரு கணை அறுந்தாலும், சங்கிலி அறுந்துவிடும். செயற்கை உரங்கள், கால்நடை அழிப்பு உள்ளிட்ட, பல்வேறு பிரச்னைகளால், உணவுச் சங்கிலி பாதிக்கப்படுவதை, தடுக்க வேண்டும். இயற்கை வேளாண் முறைக்கு, முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பொதுமக்கள் தான் நுகர்வோர். நீங்கள் தான், நம் நாட்டில், எது விளைய வேண்டும், எப்படி விளைய வேண்டும் என்பதை, முடிவு செய்ய வேண்டும். இயற்கை வேளாண்மைக்கு, புத்துயிர் அளிக்க, நம் பண்டைய கால, இயற்கை வேளாண் முறைகளை, திரும்பிப் பார்க்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

காந்தி கிராம பல்கலை முன்னாள் துணைவேந்தர் மார்கண்டேயன், ரோட்டரி கோவை மான்செஸ்டர், துணை கவர்னர் ஹரிஷ் வகாடியா உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

**மலர் சாகுபடியில் தொடர்ந்து நஷ்டம் விவசாயிகள் உண்ணாவிரதம்**

***கருத்துகள்***

பதிவு செய்த நேரம்:2012-03-29 10:56:07

ஊட்டி: மலர் சாகுபடி தொழிலில் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டு வருவதால், வங்கி கடன் வசூல் நடவடிக்கைகளை நிறுத்த வலியுறுத்தி நீலகிரி மாவட்ட மலர் சாகுடி விவசாயிகள் நேற்று ஊட்டியில் குடும்பத்துடன் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தின் பிரதான தொழிலாக தேயிலை இருந்து வருகிறது. இதற்கு அடுத்தப்படியாகத்தான் மலை காய்கறி விவசாயம் உள்ளது. பசுந்தேயிலைக்கு கடந்த 1998ம் ஆண்டு விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால், விவசாயிகள் பசுந்தேயிலையை பறிக்கும் தொழிலாளர்களுக்கு கூலி கூட கொடுக்க முடியாமல் திணறினர். வேறு தொழில்களை நாடிச் செல்லவும் ஆரம்பித்தனர். அக்காலக்கட்டத்தில், அரசு மாற்று தொழில் மேற்கொள்ள மலர் சாகுபடியை விவசாயிகள் மத்தியில் அறிமுகம் செய்தது.

இதனை விவசாயிகள் பலர் மலர் சாகுபடியில் ஈடுபட்டனர். மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு மானிய விலையில் விதை, நாற்றுக்கள் மற்றும் குடில்களை அமைத்து

கொடுத்தது. ஆனால், மலர்களை ஏற்றுமதி செய்யவோ அல்லது அதனை குளிர் பதன கிடங்களில் வைக்கவே எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக பெரும்பாலான விவசாயிகள் என்ன செய்வது என்று தெரியாமல் நஷ்டத்திற்கு தள்ளப்பட்டனர். இதுமட்டுமின்றி, மலர் ஏற்றுமதியில் இடைதரர்களின் தலையீட்டு அதிகமாக உள்ளதால், விவசாயிகள் விநியோகம் செய்யும் மலர்களுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. இதனால், மலர் சாகுபடி செய்யும் விவசாயிகள் பலர் நஷ்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில்  மலர் சாகுபடியில் நஷ்டம் அடைந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள சிறு விவசாயிகளுக்கு அரசு முழு நிவாரணம் அளிக்க வேண்டும். மலர் சாகுபடி தொழிலை மேம்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கி விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படும் வரை வங்கிகள் கடன் வசூல் நடவடிக்கைகளை நிறுத்த மாநில அரசானது ஏற்பாடு செய்து தர வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஊட்டியில் மலர் சாகுபடியாளர்கள் கவன ஈர்ப்பு உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 100 பெண்கள் உட்பட 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்க தலைவர் விஸ்வநாதன் கூறியதாவது: நீலகிரி மாவட்டத்தில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக மலர் சாகுபடி விவசாயம் செய்து வருகிறோம். தரமான விதைகள் மற்றும் நாற்றுக்கள் கிடைப்பதில்லை. உற்பத்தி செய்த மலர்களை சரிவர சந்தைப்படுத்த முடியவில்லை. மலர்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.

இடைத்தரகர்களால் பல முறை ஏமாற்றப்பட்டுள்ளோம். இடு பொருட்களின் விலை உயர்வால் உற்பத்தி செலவு பல மடங்கு அதிகமாகி விட்டது. இயற்கையின் சீற்றத்தினால், அடிக்கடி பசுமை குடில்கள் சேதமடைகிறது. மண்ணின் தன்மை முழுமையாக கெட்டுவிடுவதால், அடுத்த முறை சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

இதனால், ஆண்டு தோறும் எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. எங்களது குடும்பங்களை நடத்தவே திணறி வருகிறோம். எனவே மத்திய மாநில அரசு கள் எங்கள் மீது கருணை கொண்டு வங்கி கடன் வசூல் நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி, தரமான விதைகளை வழங்கவும், மலர்களை ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கைள் மேற்கொள்ள வேண்டும். அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு இந்த அடையாள உண்ணாவிரத போராட்டத்தை நடத்தினோம் என்றார்.

தினத்தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**
வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,850-2,970

**மணிலா பயறு**
80கிலோ கொண்ட மூட்டை 4,600-4,675

**கடலை எண்ணெய்**
ஒரு குவிண்டால்
(வரி உள்பட) 11,500.00

**கடலை புண்ணாக்கு**
70கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட ) 1,950.00

**தேங்காய் எண்ணெய்**
15 கிலோ கொண்ட டின்
(வரி உள்பட) 1,627.00

**நல்லெண்ணெய்**
குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்
ஒரு குவிண்டால் (வரி உள்பட) 11,750.00
அக்மார்க் 1750-1850

**விளக்கெண்ணெய்**
ஒரு குவிண்டால்
(வரி உள்பட) 9,000.00
15கிலோ டின் (வரி உள்பட) 1,600.00

**சூரிய காந்தி எண்ணெய்**
சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ டின்
(வரி உள்பட) 1,180-00

**ரீபைண்டு ஆயில்**
சுத்திகரிக்கப்பட்டது.
15 கிலோ டின் (வரி உள்பட) 1,910-00

**வனஸ்பதி**
டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,155-1,165

**பாமாயில்**
10 கிலோ டின் (வரி தனி) 620.00

## பூ மார்க்கெட்

கோவை பூ மார்க்கெட்டில் நேற்று விற்பனையான பூக்களின் விலை விபரம் வருமாறு :-

| | |
|---|---|
| மல்லி | 80-100 |
| சென்டு மல்லி | 50-60 |
| வாடாமல்லி | 40-00 |
| கனகாம்பரம் | 200-00 |
| முல்லை | 200-240 |
| கோழிகொண்டை | 40-60 |
| உதிரி பூக்கள் | 100-120 |
| சம்பங்கி (½ கிலோ) | 30-00 |
| ரோஜா (20 எண்ணிக்கை) | 80-100 |
| சாதா ரோஜா (20 எண்ணிக்கை) | 30-00 |

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மார்ச்.29-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 5,000 | 55.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,800 | 75.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 95.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 6,000 | 64.00 |
| துவரம்பருப்பு | ரூ. 5,400 | 58.00 |
| க.பருப்பு (மாப்டே) | ரூ. 5,200 | 54.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 5,600 | 60.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 5,600 | 62.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,200 | 44.00 |
| மொச்சை பயிறு (ஆவனா) | ரூ. 4,800 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4,000 | 44.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 3,000 | 64.00 |
| திலக்கடலை(30கி) | ரூ. 5,206 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,600 | 60.00 |
| கொள்ளு | ரூ 1,900 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 5,000 | 52.00 |
| சர்க்கரை | ரூ. 2,900 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, மார்ச்.29-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 6,889
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. ——
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 9,309
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,336
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 9,336
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 9,476
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 12,513

## கோவை உழவர் சந்தை

கோவை,மார்ச்.29-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 60-85 | காலிப்பிளவர் | ரூ. | 16-22 |
| கத்தரிக்காய் | ரூ. | 24-30 | பொறியல் தட்டை | ரூ. | 16-20 |
| வெண்டைக்காய் | ரூ. | 28-34 | பச்சை மொச்சை | ரூ. | 26-28 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 16-19 | தேங்காய் | ரூ. | 5-10 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 15-20 | பட்டாணி | ரூ. | 50-60 |
| புடலை | ரூ. | 14-20 | கறிவேப்பிலை | ரூ. | 28-30 |
| பீர்க்கன்காய் | ரூ. | 20-24 | பூண்டு | ரூ. | 20-40 |
| சுரைக்காய் | ரூ. | 8-12 | அகத்தி | ரூ. | 18-00 |
| பாகற்காய் | ரூ. | 18-20 | வாழைக்காய் | ரூ. | 16-20 |
| கொத்தவரை | ரூ. | 20-24 | குடைமிளகாய் | ரூ. | 36-40 |
| பூசணிக்காய் | ரூ. | 8-10 | சாதா பீன்ஸ் | ரூ. | 26-32 |
| அரசாணிக்காய் | ரூ. | 7-8 | டபுள்பீன்ஸ் | ரூ. | 46-50 |
| பேராக்காய் | ரூ. | 16-20 | கறிபீன்ஸ் | ரூ. | 28-32 |
| பச்சை மிளகாய் | ரூ. | 25-35 | புஸ்பீன்ஸ் | ரூ. | 50-60 |
| குண்டு மிளகாய் | ரூ. | 35-00 | காளான் | ரூ. | 85-165 |
| சின்னவெங்காயம் | ரூ. | 8-12 | இளநீர் (ஒன்று) | ரூ. | 12-15 |
| பெரியவெங்காயம் | ரூ. | 9-10 | திராட்சை | ரூ. | 36-00 |
| இஞ்சி | ரூ. | 18-22 | திராட்சை (பச்சை) | ரூ. | 70-80 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-32 | மாங்காய் | ரூ. | 20-38 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 15-23 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 15-18 |
| சேனைகிழங்கு | ரூ. | 10-14 | கொய்யா1கிலோ | ரூ. | 25-35 |
| கருணைகிழங்கு | ரூ. | 16-18 | மாதுளை1கிலோ | ரூ. | 80-140 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 10-13 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 10-00 | வரமிளகாய் | ரூ. | 60-100 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 12-00 | ஆப்பிள் | ரூ. | 120-140 |
| சிறுகிழங்கு | ரூ. | 10-00 | சாத்துக்குடி | ரூ. | 25-28 |
| முள்ளங்கி | ரூ. | 10-18 | நெல்லிக்காய் | ரூ. | 28-36 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20-24 | ஆரஞ்சு | ரூ. | 40-45 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 14-23 | வெள்ளரி | ரூ. | 18-31 |
| நூல்கோல் | ரூ. | 18-20 | புளி 1 கிலோ | ரூ. | 90-120 |
| கொத்தமல்லி | ரூ. | 16-20 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 26-30 |
| டர்னிப்ஸ் | ரூ. | 18-20 | அவரை | ரூ. | 26-30 |
| முட்டைகோஸ் | ரூ. | 15-22 | நிலக்கடலை | ரூ. | 26-32 |
| கவர்கோஸ் | ரூ. | 22-26 | மக்காச்சோளம் | ரூ. | 26-32 |
| புதினா | ரூ. | 18-00 | தர்பூசணி | ரூ. | 10-14 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 35,900 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 36,400 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 37,450 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 13,500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 14,000 |
| சுக்கு(பழையது) | ரூ. 6,500 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1,000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1,250 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 6,450 |
| கொப்பரை நாடன் | ரூ. 4.250 |
| கொப்பரை ராசு | ரூ. 4,150 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 4,350 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 5,950 |
| உருண்டை கொப்பரை | ரூ. 5,350 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 18,900 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 19,750 |
| ரப்பர் பால் | ரூ. 14,500 |
| காப்பி | ரூ. 11,000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 6,100 |
| நேந்திரகாய் | ரூ. 2,500 |
| இஞ்சி | ரூ. 500 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,மார்ச்.29-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.2,085 | 135.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1,200 | 80.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1,250 | 80.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1120 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1250 | 80.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ.1,600 | 120.00 |
| தேங்காய்எண்ணை | ரூ.1,200 | 90.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ.1,400 | 100.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ.1,200 | 67.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ.1,800 | 125.00 |
| வனஸ்பதி | | |
| வில்வி பப்ஸ் பிராண்ட் | ரூ.1,350 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ.1,130 | - |
| அபிராமிபிராண்டு | ரூ.1,150 | - |
| சாரதா பிராண்ட் | ரூ.1,150 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.183.00 | அதிகபட்சவிலை | ரூ.240.00 |
| சராசரி விலை | ரூ.167.89 | சராசரி விலை | ரூ.180.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.168.00 | குறைந்தபட்சவிலை | ரூ.220.73 |

**பட்டு நூல் ரூ.1,716**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 21,336.00 | 21,336.00 | 21,320.00 |
| ஒரு கிராம் | 2,667.00 | 2,667.00 | 2,665.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 56,495 | 60,500 | 61,000 |
| ஒரு கிராம் | 60.50 | 60.50 | 61.00 |